

# 12வது ஞானச்சாரியார்
## ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்
## அவர்களின் எழுத்துக்கள்





11வது ஞானச்சாரியார்

12வது ஞானச்சாரியார்

**கார்த்திகை மாத வெளியீடு**

பதினெண்சித்தர்கள் வகுத்தளித்த மெய்யான இந்துமத ஆண்டு 43,73,112

# ஆதிசிவனார் தமிழில் அருளிய இந்துவேதத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்! இந்துமதத்தைப் புரிந்து கொள்ளுங்கள்!

## “தமிழர்களே! இந்துவேத ஆச்சாரியாராகுங்கள்”

கட்டுரையின் 4ஆம் பகுதி

***உள்ளுறைத் தலைப்புக்கள்:***

1) இந்துமதத்துக்கு வருங்காலம் உண்டா? இல்லையா?
2) ஆத்திகர்களின் உண்மையான நிலை
3) நாத்திகம், நாத்திகர் பற்றிய ஆய்வுகள்
4) நாத்திகர்கள் பெருகியது ஏன்?
5) நம் நாட்டு நாத்திகர்களின் போலிநிலை
6) ஆத்திகமும் நாத்திகமும்
7) நிறைவுரை

www.gurudevar.org
Email: indhuism@gmail.com
Cell: 9972130609

**தமிழ்மொழிப் பற்றும், தமிழர் நெறியான இந்துமதப் பற்றும் உள்ளவர்களுக்கு அனுப்பப்படும் சுற்றறிக்கை. இதை நகலெடுத்துத் தமிழ் தெரிந்த அனைவருக்கும் படிக்கக் கொடுக்கவும்.**

# ஆதிசிவனார் தமிழில் அருளிய இந்துவேதத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்! இந்துமதத்தைப் புரிந்து கொள்ளுங்கள்!

## "தமிழர்களே! தமிழாசிரியர்களே! இந்துவேத ஆச்சாரியாராகுங்கள்"

*[முந்தைய இதழின் தொடர்ச்சி...]*

## இந்துமதத்துக்கு வருங்காலம் உண்டா? இல்லையா?

(9) இப்படி, இந்துமத இந்தியாவுக்குள் இருக்கக்கூடிய அனைவருக்கும்

A. இந்துமதத்துக்கென வேத நூல்கள் இருக்கின்றன

B. இந்துமதத்துக்கென இந்துமத நூல்கள் இருக்கின்றன

C. இந்துமதத்துக்கெனப் பூசைமொழியாக, வேதமொழியாக இந்தியாவிலுள்ள அனைத்து மொழிகளுக்கும் மூலமொழியாக தாய்மொழியாக அடிப்படை மொழியாக 'அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழி' இருக்கின்றது.

D. இந்துவேதத்துக்கும், இந்துமதத்துக்கும் உரிய வரலாறும், வாழ்வியலும், அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் முறையாகவும், முழுமையாகவும், காலக்கணக்கீட்டு அடிப்படையில் இருக்கின்றன.

E. இந்துவேத இந்துமத நாயகர்கள், நாயகிகள், தலைவர்கள், அருளாளர்கள், காப்பாளர்கள், கடவுள்கள், தேவர் தேவதைகள், தெய்வங்கள், ஆண்டவர்கள், கோயில்கள், வழிபடுநிலையங்கள், வழிபாட்டு முறைகள், பூசைவிதிகள், சடங்கியல் நெறிகள், மரபுகள், பழக்க வழக்கங்கள்.... முதலிய அனைத்தையும் பற்றிய முறையான, நேரடியான, முழுமையான செய்திகள் அனைத்தும் அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் இருக்கின்றன.

F. தமிழ்மொழியின் எழுத்துக்கள் அனைத்தும், அருட்சத்தியை, சித்தியை, முத்தியை விளைவித்துப் பயிராக்கி, உருவாக்கித் தரக்கூடிய சக்கரங்களே ஆகும். அதாவது, 'தமிழ் மொழிக்குரிய ஒவ்வோர் எழுத்தின் வரிவடிவமும், அந்த வடிவத்தில் உள்ள வளைவு, நெளிவு, சுழிவு, நேர்கோடு, ... முதலியவை அனைத்தும் அருளாற்றலை உருவாக்கும் ஆற்றலை உடையவையாகும். எனவே, கடந்த மூன்று உகங்களில், நாள், கோள், மீன், இராசி, ... முதலியவற்றின் நிலைகளில் ஏற்படக் கூடிய மாற்றங்களுக்கு ஏற்ப, ஆதிசிவனார் வழங்கிய தமிழ் எழுத்துக்களின் வரிவடிவ அமைப்புக்களில் ஒன்பது முறை மாற்றங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. அதாவது, முதல் பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அனாதிக் கருவூரார் முதல் ஒன்பதாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் வைகையாற்றங்கரைக் கருவூரார் முடிய ஒவ்வொரு பீடாதிபதியும், தமிழ்மொழியின் வரிவடிவத்தில் ஒருசில திருத்தங்கள் செய்தார்கள், ஒருசில மாற்றங்களும் செய்தார்கள்.

G. இந்த நான்காவது உகமான கலியுகத்தில் தோன்றிய பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் தம் காலத்தில், முதல் மூன்று உகங்களிலும் இந்துவேதத்துக்கும், இந்துமதத்துக்கும் இந்துக்களுக்கும் ஏட்டளவிலும், நாட்டளவிலும் மிகப் பெரியபெரிய சிக்கல்கள், சிதைவுகள், சீரழிவுகள், இழிவுகள், இழப்புக்கள், குழப்பங்கள், திரிபுகள், மாற்றங்கள் ... முதலியவை பிறமண்ணினராலும் அவர்தம் வேதத்தாலும், வேத நாகரீகத்தாலும், வேத மதத்தாலும், வேத வாழ்வியலாலும் ஏற்பட்டு விட்டதை முழுமையாக உணர்ந்து; அதற்கேற்பப் பத்தாவது முறையாகத் தமிழ்

எழுத்துக்களின் வரிவடிவ அமைப்புக்களில் பல திருத்தங்களையும், மாற்றங்களையும் செய்திட்டார். அத்துடன், 'தமிழ் மொழிக்குரிய முன்னூற்று இருபத்திரண்டு எழுத்துக்களில் (322) அருளூறு தெய்வீக ஆற்றல் மிக்க மந்தரம், மந்திரம், மந்திறம், மாந்தரம், மாந்தரீகம், தந்தரம், தந்திரம், தந்திறம், தாந்தரம், தாந்தரீகம், எந்தரம், எந்திரம், எந்திறம், ஏந்தரம், ஏந்தரீகம், ஞானம், தவம், சித்தம் எனும் பதினெட்டுத் துறைகளுக்கும் உரிய எழுபத்தைந்து எழுத்துக்களை (75) உலகியல் வழக்காற்றிலிருந்து முழுமையாக அகற்றி விட்டார்! நீக்கி விட்டார்!! விலக்கி மறைத்து விட்டார்!!!.....

அதாவது, அவர் இப்படிச் செயல்பட்டது, அண்டபேரண்டமாளும் பதினெண்சித்தர்கள், அண்டபேரண்டமாளும் இந்துவேதப் பேருண்மைகளையும், இந்து மதப் பேருண்மைகளையும் எல்லா அண்டங்களிலும் உள்ள உலகத்தார் உணர்ந்து, புரிந்து, தெளிந்து முறையாகப் படுத்தி, மனித வாழ்வை நிறைவும் நிம்மதியும் மகிழ்வும் பயனும் உடையதாக ஆக்கிக் கொள்வதற்காகக் கொடுத்திட்ட எழுபத்தைந்து எழுத்துக்களின் வரிவடிவ அமைப்புக்களும், ஒலிநய ஆற்றல்களும் பிறமண்ணினரால் தவறாக, முறைகேடாக, இழிவழிவுக்குரியதாகப் பயன்படுத்தப் பட்டுவிடக் கூடாது என்ற முன்னெச்சரிக்கை முயற்சியே ஆகும்.

இவர்தான், 'மதுரையின் பேரழிவு', பிறமண்ணினரால் சூழ்ச்சியாக நிகழ்த்தப் பட்டதாலும், மதுரையின் பேரழிவில் நான்கு யுகமாக வளர்க்கப் பட்ட தமிழிலக்கிய இலக்கண நூல்களும், பல்வேறு துறைகளைச் சார்ந்த நூல்களும் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டு எரித்துச் சாம்பல் ஆக்கப் பட்டன என்பதாலும்; தமிழ்ப் புலவர்களும், புரவலர்களும், மாணாக்கர்களும், தமிழ்மொழியில் ஈடுபாடு உடையவர்களும் ஈவு இரக்கமின்றி நாடு முழுவதும் கண்ட கண்ட இடங்களில் வெட்டிக் கொலை செய்யப் பட்டார்கள் என்பதாலும், *(இன்று இதை எழுதும்போது தாத்தாவும், ஐயாவும் நேரில் தோன்றி* ***'இந்த ஒரு நூல் போதும், இதில் அனைவரும் தயாராவர், எல்லோரும் இதைப் படித்தால் போதும்'*** *என்றனர். இதை எழுதும்போது மீண்டும் ஐயாவும் தாத்தாவும் அடுத்தடுத்து வந்து,* ***'இந்த நூலைப் பொறுப்பாக உன்னால் தயாரிக்கப் படும் அனைவருக்கும் கட்டாயப் பாடமாக்கிடு'*** *என்று வாழ்த்தினர்... பல காட்சிகளும், தோற்றங்களும், ... விளக்கப்பட இயலவில்லை)* நாடு முழுதுமிருந்த தமிழ்ப் பள்ளிகளும், பட்டிமன்றங்களும், நூலகங்களும், ஏடுகளை விற்கும் கடைகளும், ... இடித்துத் தகர்க்கப் பட்டுத் தரைமட்டமாக்கப் பட்டதாலும் (இந்தப் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி) மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவரும் மணிமேகலைக் காப்பியத்தின் ஆசிரியருமான 'மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனாரைக் கொண்டு, மதுரை-திண்டுக்கல் நத்தத்தை அடுத்த கரந்தமலையில் நாடு முழுவதும் எஞ்சி மிஞ்சி சிதைந்தழிந்து கிடந்த தமிழ் ஓலைச்சுவடிகளை ஒன்றுதிரட்டி 'மேல்கணக்கு நூல்கள்', 'மையக்கணக்கு நூல்கள்', 'கீழ்க்கணக்கு நூல்கள்' என்ற தலைப்பில் பாடல்களின் தொகுப்பை உருவாக்கினார்.

அதில் 'மையக்கணக்கு நூல்கள்' என்பவை இந்துவேதத்தையும், இந்துமதத்தையும் இந்துக்களையும் பற்றி மட்டுமே கூறுவன, குறிப்பன, விளக்குவன.... என்பதால், இந்த 'மையக் கணக்கு நூல்கள்' எனும் தொகுதியை பிறமண்ணினர்கள் என்றென்றும் காணக் கூடாது என்றும், பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் வாரிசுகளில் கூடப் பக்குவமுள்ளவர் மட்டுமே படித்திடலாம் என்று கடுமையான விதிகளைச் செய்திட்டார். இதைத் தொடர்ந்தே 'அண்டபேரண்டமாளும் இந்துவேத நூல்களையும், இந்துமத நூல்களையும் பதினெண்சித்தர் பீடாதிபதியின் கருவழி வாரிசுகளிடமும், குருவழி வாரிசுகளிடமும், விந்துவழி வாரிசுகளிடமும் கேட்டுத்தான் தெரிந்து கொள்ள வேண்டும்! தெரிந்து கொள்ள முடியும்! என்ற

மறைவான, நிறைவான, கடுமையான விதிகளையும், நியதிகளையும், சட்டதிட்டக் கட்டுப்பாடுகளையும் உருவாக்கிச் சென்றிட்டார்! உருவாக்கிச் சென்றுவிட்டார்!

H. பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி தம் காலத்திலும், பிறமண்ணினரின் ஆதிக்கத்தாலும், அவர்தம் மொழியின் ஆதிக்கத்தாலும்; அவர்தம் வேதநெறியின் ஆதிக்கத்தாலும், .... பதினெண்சித்தர்களின் இந்துவேதமும், இந்துமதமும் மிகப்பெரிய அளவில் சரி செய்ய முடியாதபடி பல்வேறு வகையான பாதிப்புக்களையும், இழப்புக்களையும், திருத்தங்களையும், சிதைவுகளையும், சீரழிவுகளையும் பெற்றுவிட்டதைக் கண்டார். எனவே, இவர்,

1. ஆழ்வார்களின் பாடல்களை 'நாலாயிர திவ்வியப் பிரபந்தமாக' வடிவம் பெறச் செய்து வாழ்வு பெறச் செய்தார்.

2. அதேபோல் நாயன்மார்களின் பாடல்களைத் 'திருமுறைகளாக' வடிவம் பெறச் செய்து வாழ்வு பெறச் செய்திட்டார்.

3. அத்துடன், 'தமிழினத்தார்தான் கங்கைக் கரையிலும், யமுனைக் கரையிலும், இமயத்தின் அடியிலும், மடியிலும், முடியிலும் காப்பிய நாயகர்களாக, புராண இதிகாசக் கடவுள்களாக, முனிவர்களாக, இருடிகளாக, தவசிகளாக, ஞானிகளாக, துறவிகளாக, ஆச்சாரியார்களாக, குருமார்களாக, குருபீடங்களாக, குருதேவர்களாக, குருக்கள்களாக.... விளங்கினார்கள்' என்ற பேருண்மைகளை எல்லோரும் எளிதில் தெரிந்து புரிந்து நினைவில் நிலைநிறுத்திக் கொள்வதற்காகப் பழம்பெரும் 'மேருபுராணம்', 'சிவபுராணம்', 'முருகபுராணம்', 'மாயோன் புராணம்', 'வருணன் புராணம்', 'இந்திரன் புராணம்', 'காடுகிழாள் புராணம்', 'சத்தி புராணம்', 'பிறம்ம புராணம்', 'இராமாயணம்', 'மகாபாரதம்', ... முதலியவைகளை மீண்டும் இவர் காலத்திய புலவர்களைக் கொண்டு எல்லோரும் எளிதில் விளங்கிடும் வண்ணம் தெள்ளு தமிழில் காப்பியங்களாக மீண்டும் உருப்பெற்று உலாவரச் செய்தார்.

4. இவற்றினடிப்படையில் இந்துவேத நூல்களையும், இந்துமத நூல்களையும் கற்றிட இந்துவேத பாடசாலைகளையும் இந்துமதப் பள்ளிகளையும் செயலாக்கிடும் அத்திரியார், சாத்திரியார், சூத்திரியார், தோத்திரியார், நேத்திரியார், வேத்திரியார், பூசாறி, குரு, குருக்கள், குருமார், குருதேவர், ஒவ்வொரு கோயிலுக்குரிய மடாதிபதி, பீடாதிபதி, சன்னிதானம், ஆதினம், ... முதலான பதினெட்டு வகையான அருட்பட்டத்தவர்கள், அருளை அநுபவப் பொருளாகத் தேவைக்கேற்ப மருந்தாகவும், விருந்தாகவும் வழங்கிடும் வல்லமை பெற்ற நாற்பத்தெட்டு வகைப்பட்ட அருட்பட்டத்தவர்கள்... முதலியோர்களை உருவாக்கிடுவதற்காகப் பதினெண்சித்தர் பீடாதிபதிகளால் மட்டுமே தோற்றுவிக்கப்படக்கூடிய 'குருகுலங்கள்', 'திருகுலங்கள்', 'தருகுலங்கள்', 'கருகுலம்' முதலியனவற்றையும் தோற்றுவித்துச் செயல்பட்டிட்டார். இவற்றை எல்லாம் என்றென்றும் காத்துச் செயலாக்கிடுவதற்காக 'ஓர் இந்துமத அருட்பேரரசை' பிற்காலச் சோழப் பேரரசாக (முதலாம் விசயாலயன் கி.பி. 785 முதல்) தோற்றுவித்திட்டார். அப்பேரரசும் மூன்றும் இராசேந்திரன் முடிய (கி.பி.1279) நின்று நிலவியது. இருந்த போதிலும், இந்து மதத்தவர்களின் மெத்தனப் போக்காலும், எதார்த்தப் போக்காலும், எல்லோரையும் நம்பும் ஏமாளிப் பண்பாலும், நாத்திகரின் துரோகச் செயல்களாலும், பிறமண்ணினரின் இந்துவேத இந்துமத விரோதச் சதிகளாலும், சூழ்ச்சிகளாலும், ... இவருடைய முயற்சிகளும், சாதனைகளும் சிதைக்கப்பட்டுச் செயல்தேக்கமும், முடக்கமும், ஒடுக்கமும் பெறுமாறு செய்யப் பட்டுவிட்டன.

I. இன்று வாழும் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி

1) இந்துவேதம் தழைக்கவும், இந்துமதம் பிழைக்கவும்,

2) இந்துக்களின் ஆட்சி மாட்சி, மீட்சி பெறவும்,

3) இந்துக்களிடையே ஒற்றுமையும் ஒருமைப்பாடும் உருவாகவும்,

4) இந்துக்களிடையே இந்துமதப் பற்றும், நம்பிக்கையும் நன்கு கிளைத்துச் செழித்து வளரவும்,

5) இந்துக்களின் வேத அறிவும், மத ஒழுகலாறும் விழிச்சி பெறவும்,

6) இந்துக்களிடையே இந்துமதக் கோயில் கட்டிடங்களையும், கோயில் சொத்துக்களையும், கோயில் நிர்வாகங்களையும், கோயில் நடைமுறைகளையும் போற்றிப் பேணிச் சீரும் சிறப்புமாகப் பாதுகாத்திடும் பண்பும் பழக்கமும் மறுமலர்ச்சி பெற வேண்டும்,

7) இந்துமதத் தலைவர்களையும், துறவிகளையும், தொண்டர்களையும் மதித்துப் போற்றி மரியாதை செய்து காத்திடும் உணர்வும், முயற்சியும் முறையாக பயிற்சிகளோடு கூடிய புதிய எழிச்சி மிக்க செயல் ஊக்கமும், செயலாக்கமும் பெறவேண்டும்,

8)இந்துமத நாத்திகர்களையும், ஆத்திகர்களாக ஆக்குவதற்குரிய முயற்சிகள் முறையாகத் தத்துவ அடிப்படையில் விஞ்ஞானச் சூழலில் விரிந்தும் விரைந்தும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

9) இந்துமதத் துரோகப் போக்கும் நோக்கும் உடையவர்களைத் திருத்துவதற்குரிய முயற்சிகள் மிகப் பெரிய அளவில் விரைந்து மேற்கொள்ளப்படல் வேண்டும்,

10) இந்துமத எதிரிகளும், பகைவர்களும், விரோதிகளும், ... இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் பாதுகாக்கும் பாதுகாவலராக மாறுவதற்குரிய வழிவகைகளை அநுபவப் பூர்வமாகப் பலரோடும் கலந்து நெடிய பெரிய ஆய்வுகளும், பட்டி-மன்றங்களும், மாநாடுகளும்... நிகழ்த்துவதன் மூலம் உருவாக்க வேண்டும்! உருவாக்க வேண்டும்!! உருவாக்க வேண்டும்!!! உருவாக்க வேண்டும்!!!!

என்பதற்காகவே எல்லையற்ற முயற்சிகளை நிகழ்த்துகிறார்! நிகழ்த்தி வருகிறார்! அதாவது இன்றுள்ள பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, இந்துமதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரியக் குருபீடக் குருதேவர், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார், அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார் அவர்கள் தமது குருபாரம்பரிய மரபுகளையும், சட்டதிட்டக் கட்டுப்பாடுகளையும், நெறிமுறைகளையும், விதிகளையும்.... தளர்த்திக் கொண்டு, ... எல்லாவகைப் பட்ட, எல்லா நிலைப்பட்ட ... மக்களோடும் கலந்து பழகி, இந்துவேதம் தழைக்கவும், இந்துமதம் பிழைக்கவும் தொடர்ந்து எல்லையிலா முயற்சிகள் மேற்கொண்டு வருகிறார். இம்முயற்சிகளின் ஒரு துளியே “இந்துக்களே! தமிழர்களே! தமிழாசிரியர்களே! உடனடியாக இந்துவேத ஆச்சாரியாராகுங்கள்” என்ற அறிவிப்பு அழைப்பாகும்! அறிவிப்பு அழைப்பாகும்!! அறிவிப்பு அழைப்பாகும்!!!

J. இப்படி, (A) முதல் (I) வரை ஒன்பது எண்ணிக்கைக்குரிய பேருண்மைகளை, இந்த (9)ஆம் பகுதியில் பட்டியலிட்டுக் காட்டப்படுவதன் மூலம்; இந்துக்களுக்கு என்னென்ன செய்யப்பட வேண்டும்? தெரிவிக்கப்பட வேண்டும்? புரிவிக்கப்பட வேண்டும்? மீண்டும் பழக்கத்துக்குக் கொண்டுவருமாறு அறிவிக்கப்பட வேண்டும்? .... என்ற முயற்சி ஓரளவு நிறைவு பெறுகிறது.

“குருவும் திருவும் ஒன்றாகித் தம்முள் கருக்கொண்டவரே நாற்பத்தெட்டு வகையான வழிபடு நிலைகளைப் பெறுகின்றனர். இதற்குப் பதின்மூன்று வகையான அருளாளர் நிலைகளைப் பல பிறப்புகளில் கடத்தல் வேண்டும்”

-குருபாரம்பரியம்

***இந்தக் குருபாரம்பரிய வாசகம் குழப்பங்களை, கலக்கங்களை, மயக்கங்களைப் போக்கும்.***

## (10) ஆத்திகர்களின் உண்மையான நிலை:

a) "'நம் மக்களில் எவ்வளவு பேர் ஆத்திகர்களாக இருக்கிறார்கள்' என்பது எமக்குத் தெரியும்! தெரியும்!! தெரியும்!!!..." என்று கூறித்தான் இன்று வாழும் இந்துமதத் தலைமை ஆச்சாறியக் குருபீடக் குருதேவர், அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார் அவர்கள் செயல்படப் புறப்பட்டுள்ளார்; செயல்பட்டு வருகிறார். அதாவது, "'நமது ஆத்திகப் பெருமக்கள் எவ்வளவு பேர்?' என்று தனித்துப் பிரித்துப் பட்டியலிடும் முயற்சியை மேற்கொள்ளும் பொழுதுதான்; நமது ஆத்திகர்கள் எப்படிப்பட்ட நிலைகளில், நிலைமைகளில் உள்ளார்கள் என்ற பேருண்மை விளங்கிடுகின்றது" என்று அடிக்கடி கூறியபடியேதான் செயல்பட்டு வருகிறார் அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார்.

b) இன்றைய நமது ஆத்திகர்களில் யாருக்குமே

1) இந்துவேதம்,
2) இந்துமதம்,
3) இந்துக்களின் வாழ்க்கை,
4) இந்துப் பண்பாடு,
5) இந்து நாகரிகம்,
6) இந்துக் கொள்கை,
7) இந்துக் குறிக்கோள்,
8) இந்து நெறி,
9) இந்து மறை,
10) இந்து முறை,
11) இந்து கலை,
12) இந்து அறிவியல்,
13) இந்து ஞானம்,
14) இந்து நீதி,
15) இந்துச் சட்டம்,
16) இந்து சமுதாயம்,
17) இந்து அரசியல்,
18) இந்து குடும்பவியல்,
19) இந்துத் தனிமனிதவியல்,
20) இந்து சடங்கியல்,
21) இந்து விரதங்கள்,
22) இந்து நோன்புகள்,
23) இந்துத் திருநாள்கள்,
24) இந்து விழாக்கள்,
25) இந்துமதத் தலைவர்கள்,
26) இந்துமத மடங்கள்,
27) இந்துமதப் புனித இடங்கள், ....
28) இந்துமதச் சிறப்புக்கள்,
29) இந்துமதக் குறைபாடுகள்,
30) இந்துமத நலிவுமெலிவுக்குரிய காரணங்கள்,
31) இந்துமதத்துக்கும் புதிதாக வந்துள்ள மதங்களுக்குமிடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகள்,
32) இந்துமதத்தவர்கள் மாற்றுமதங்களுக்கு மாறுவதற்குரிய அடிப்படையான பேருண்மைகள்,
33) இந்துக்கள் தொடர்ந்து மதம் மாறிக்கொண்டே இருப்பார்களா?,
34) இந்துக்கள் மதம் மாறிய பிறகு எப்படி இருக்கிறார்கள்?
35) இந்துக்களின் மதமாற்றம் நிலையானதா? உண்மையானதா? ...
36) இந்துக்கள் மதம் மாறினாலும் தாய்மதத்தின் பண்பாட்டுக் கூறுபாடுகளையும், நாகரிகக் கூறுபாடுகளையும் முழுமையாகப் புறக்கணித்து மறக்க முயல்கிறார்களா?
37) இந்துக்கள் மதம் மாறியவுடனேயே தங்களை அன்னியர்களாக! அன்னிய நாட்டார்களாக! அன்னியப் பண்பாட்டாளர்களாக! அன்னிய நாகரிகத்தவர்களாக... முழுமையாகத் தங்களை மாற்றிக் கொள்ள முயற்சிப்பது ஏன்?! ஏன்??!! ஏன்???!!!....

எனும் தலைப்புக்களில் சிந்திக்க வேண்டும் என்ற எண்ணமோ! முயற்சியோ!! உணர்வோ!!! சிந்தனையோ!!!! அக்கறையோ!!!!! ஆர்வமிகு ஈடுபாடோ!!!!!! ஏற்படவில்லை! ஏற்படவில்லை!! ஏற்படவில்லை!!! ஏற்படவே இல்லை!!! இல்லை! இல்லை!! இல்லை!!! இல்லவே இல்லை!!!!

c) இப்படி நமது ஆத்திகர்களின் நிலையை நாற்பது(40) வகைப்பட்ட தலைப்புகளில் அல்லது கருத்தோட்டங்களில் சிந்திக்கத்

தெரியாதவர்களாக! சிந்திக்க விரும்பாதவர்களாக!! சிந்திக்க முடியாதவர்களாக!!!... வரிசைப் படுத்திக் குற்றம் சாட்டிட முயலுவதற்குக் காரணம்; மேலே குறிப்பிட்ட நாற்பது கருத்தோட்டங்கள் மட்டுமன்றி; இவை போன்ற எண்ணற்ற கருத்தோட்டங்களில் சிந்தித்துப் பார்த்துவிட்டு; மேலும், மேலும் தொடர்ந்து சிந்தித்துப் பார்த்தபடியே செயல்பட்டுக் கொண்டிருப்பவர்தான் இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, இந்துமதத் தலைமை ஆச்சாறியக் குருபீடக் குருதேவர், அந்தணர் அண்ணல், ஞானுச்சாரியார். எனவே, நம் நாட்டின் ஆத்திகர்களின் சிந்தனையற்ற, ஆராய்ச்சிப் போக்கற்ற, சுறுசுறுப்பற்ற நோக்கும், போக்கும்தான் நமது இந்துவேதத்தின் தாழ்ச்சிக்கும், இந்துமதத்தின் வீழ்ச்சிக்கும் காரணமாகும். இப்பேருண்மையினை நம் ஆத்திகப் பெருமக்கள் உணர்ந்து ஒப்புக் கொண்டு, சிந்தித்துச் செயல்பட முன்வர வேண்டும். இல்லாவிட்டால், நமது ஆன்மீக உலகுக்கு வருங்காலமே இல்லாமல் போய்விடும்.

d) நமது ஆத்திகர்கள் ஒன்றுதிரண்டு, ஒற்றுமைப்பட்டு நாத்திகர்களின் கொள்கைகளையும், செயல்திட்டங்களையும் பற்றிய ஆய்வுகளைக் கருத்தரங்குகள், பட்டிமன்றங்கள், மாநாடுகள் .... முதலியவைகளில் நிகழ்த்தி யிருந்தால், இந்த நாட்டில் நாத்திகர்களே வளர்ந்திருக்க முடியாது. ஆனுல், 'நமது ஆத்திகர்கள் கண்மூடித்தனமாக நாத்திகர்களை வெறுக்கவும், மறுக்கவும், எதிர்க்கவும், பகைக்கவும், இழித்துப் பழித்துப் புறக்கணிக்கவும் முற்பட்டார்கள்'. அதன் விளைவுதான், நாத்திகர்களின் வளர்ச்சி காட்டுத் தீ போலாயிற்று. நமது ஆத்திகர்கள் நாத்திகர்களின் வேகமான விரிவான வளர்ச்சியைக் கண்டு அஞ்சினுர்கள், கலக்கமுற்றுர்கள், கவலைப்பட்டார்கள். அதனுல், நமது ஆத்திகர்கள் தங்களுடைய ஆத்திக வாழ்வியல் நடைமுறைகளை, ஒழுகலாறுகளை, நம்பிக்கைகளை, மரபுகளை, பழக்க வழக்கங்களை, சாத்திரச் சம்பிறதாயங்களை, சடங்குகளை, திருநாள்களை, திருவிழாக்களை, பூசைகளை... இலைமறை காயாகப் பட்டும் படாமலும், தொட்டும் தொடாமலும், விட்டும் விடாமலும் கடைப்பிடிக்க ஆரம்பித்தார்கள். அதாவது, ஆத்திகர்கள் வெளிப்படையாகவே நாத்திகர்களைக் கண்டு பயப்பட்டு, அடங்கி ஒடுங்கி, நடுநடுங்கி வாழ ஆரம்பித்திட்டார்கள்.! அடங்கி ஒடுங்கி, நடுநடுங்கி வாழ ஆரம்பித்திட்டார்கள்.!! அடங்கி ஒடுங்கி, நடுநடுங்கி வாழ ஆரம்பித்திட்டார்கள்.!!! என்பதுதான் உண்மை! உண்மை!! உண்மை!!! ஆனுல், இந்த உண்மையை நமது ஆத்திகர்கள் இன்றைக்கும் சரி! அன்றைக்கும் சரி! ... வெளிப்படையாக உணரவில்லை! உணரவில்லை!! உணரவில்லை!!! உணரவே இல்லை!!!!

எனவேதான், தொடர்ந்து ஆத்திகர்கள், நாத்திகர்களைச் சந்திக்க முடியாமல், நாத்திகர்கள் மீது கண்மூடித்தனமாக வெறுப்புணர்வையும், கசப்புணர்வையும், எதிர்ப்புணர்வையும் மனத்தளவில் வளர்த்துக் கொண்டிட்டார்கள். அவற்றுல், ஆத்திகர்களின் சிந்தனையாற்றல் வற்றி வறண்டு போக ஆரம்பித்து விட்டது. எனவேதான், ஆத்திகர்கள், நாத்திகர்களைச் சந்திக்கவோ! சமாளிக்கவோ! முற்படாமல்; மறைமுகமாக நாத்திகர்களை ஆதரிக்கவும் ஆரம்பித்து விட்டார்கள். அதாவது, 'நமது ஆத்திகப் பெருமக்கள், நாத்திகர்களை வெறுக்கவும், மறுக்கவும் எதிர்க்கவும் முற்பட்ட அளவுக்கு, நாத்திகர்களைப் பற்றி ஆய்வுகளை நிகழ்த்திச் சிந்தித்து; நாத்திகர்களைச் சந்தித்துப் போராடத் தங்களைத் தயாரித்துக் கொள்ளத் தவறிவிட்டார்கள். அத்துடன், நாத்திகர்களின் வளர்ச்சியைக் கண்டு தளர்ச்சியும், அயர்ச்சியும் அடைந்து நாத்திகர்களின் மறைமுக ஆதரவாளர்களாக மாறி; நாத்திகர்களிடமே அடைக்கலமாகி விட்டார்கள்! நாத்திகர்களிடமே அடைக்கலமாகி விட்டார்கள்!! நாத்திகர்களிடமே அடைக்கலமாகி விட்டார்கள்!!!

எனவே, நாத்திகர்கள், சமயத் துறை, சமுதாயத் துறை, இலக்கியத் துறை, கலைத்துறை, அரசியல் துறை... முதலிய அனைத்துத் துறைகளிலும் நாத்திகர்களே மிகப் பெரிய செல்வாக்கையும், சிறப்பையும் பெறலானார்கள். அதனால், மக்களிடையே ஆத்திகர்கள் மீது பரிவும், இரக்கமும், பரிதாபமுமே ஏற்பட்டன. அவையே, நமது இந்துமதத்தை நலிந்து மெலிந்து சிதைந்து சீரழிந்த நிலையில் தொடர்ந்து மூச்சு விட்டு உயிர்வாழச் செய்துள்ளன. எனவே, இந்நிலையைப் பற்றி இனிமேலாவது நம்மவர்கள் சிந்தித்தேயாக வேண்டும். இதற்காகத்தான், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள், “இந்துக்களே! தமிழர்களே! தமிழாசிரியர்களே! உடனேயே இந்துவேத ஆச்சாரியாராகுங்கள்” என்ற அறிவிப்பு அழைப்புக்களைத் தொடர்ந்து வழங்கி வருகிறார்! வழங்கி வருகிறார்!! வழங்கி வருகிறார்!!!.......

**சமுதாய மாற்றமே நமது நோக்கம்!**

தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் மிகப் பெரிய செல்வாக்கினையும் சொல்வாக்கினையும் பெற்றிருந்தும் கூட சமுதாய சீர்திருத்தம் என்ற சொல்லைத்தான் இறுதி வரை சொல்லிக் கொண்டிருந்தார். அதாவது, அவர் சமுதாய மாற்றத்தைப் பற்றி (Social Change) எதுவுமே கூறவில்லை. மேலும் பார்ப்பனர் அல்லாதார் முன்னேற்ற இயக்கம் (Non Brahmins iyakkam) என்றுதான் தனது போராட்ட அடிப்படைகளை வகுத்தார். இன்னும் சொல்லப் போனால் மகான் மகாத்மா காந்தியோ, மாவீரர் அம்பேத்காரோ கூட நிலையான சமுதாய மாற்றத்தைப் பற்றி நினைத்துப் பார்க்க முடியாமல் போன இந்த நாட்டில்தான் நாம் நமது ஒவ்வொரு பேச்சும் மூச்சும் சமுதாயத்தின் கீழ்மட்ட குடிமகனும் மேல்மட்ட குடிமகனும் ஒன்றாகிடும் நற்காரியத்தை துணிந்து திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறோம். அதாவது, **கடவுளின் முன்னிலையில் அனைவரும் சமம் என்ற தத்துவத்தின் செயல் வடிவமே நாம்.**

# (11) நாத்திகம், நாத்திகர் பற்றிய ஆய்வுகள்

a) நம் நாட்டு நாத்திகர்களைப் பற்றி நன்கு தெரிந்து, அறிந்து, ஆராய்ந்து, புரிந்து, தெளிந்து, உணர்ந்துதான், இந்துமத மறுமலர்ச்சிப் பணியை, இந்துமத வளவளர்ச்சிப் பணியை, இந்துமத ஆட்சி மாட்சி மீட்சிப் பணியை, இந்துவேதச் செழிச்சிப் பணியைத் துவக்கியுள்ளார் அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார். எனவே, நமது நாத்திகர்களால் இந்து வேதமும், இந்து மதமும் எப்படி எப்படி யெல்லாம் பாதிக்கப் பட்டிருக்கின்றன? என்பது பற்றியும்; நமது நாத்திகர்கள் திருந்துவதற்கு என்னென்ன வழிகள்? என்பது பற்றியும்; நமது நாத்திகர்கள் திருத்தப் படாவிட்டால், என்னென்ன விளைவுகள் ஏற்படும் என்பது பற்றியும்; நமது நாத்திகர்களின் உண்மைநிலையை விளக்கியுரைத்தே விளக்கங்களை வழங்குகிறார்.

b) நமது நாத்திகர்களால் இந்துவேதமும், இந்துமதமும், இந்துக்களும் அடைந்துள்ள பாதிப்புக்களை முறையாகப் பட்டியலிட்டுப் பார்த்தே விமரிசிக்க வேண்டும். நமது இந்து வேதத்தைப் பொறுத்தவரை, ஏறத்தாழ எவருக்குமே இந்துவேதம் முழுமையாகத் தெரியாது! இன்னும் சொல்லப் போனால், எந்த ஓர் இந்துவுமே இந்துவேதம் முழுமையையும் ஏட்டு வடிவில், புத்தக வடிவில் பார்த்திருக்க இயலாது! இயலாது!! இயலாது!!! இயலவே இயலாது!!!!

ஏனெனில், இந்துவேதம் என்ற பெயரில்; ஒருசில பூசைமொழி மந்திரங்களும், தோத்திரங்களும், விதிகளும், நெறிமுறைகளும் மட்டும்தான் நாட்டு வழக்கில் வாழ்ந்து வருகின்றன! வாழ்ந்து வருகின்றன!! வாழ்ந்து வருகின்றன!!! மற்றபடி, இந்துவேதம் என்றால் இருக்கு வேதம், அசுரவேதம், யாமவேதம், அதர்வான வேதம் என்ற நான்கு வேதங்களின் பெயர்களைக் கூடச் சரியாக எழுதவோ, சொல்லவோ, தெரிந்தவர்கள் ஏறத்தாழ

இந்துமதத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில் சிலராகத்தான் இருக்கிறுர்கள்! சிலராகத்தான் இருக்கிறுர்கள்!! சிலராகத்தான் இருக்கிறுர்கள்!!! எனவே, இந்துவேதத்தின் நான்கு பெரும்பகுப்புக்களின் பெயர்களேயே சரியாகத் தெரியாத இந்துக்களே அதிகம் பேர் இருக்கிறுர்கள் என்கின்றபோது; இந்துவேதத்தைப் பற்றி முழுமையாகத் தெரிந்தவர்களே இல்லே! இல்லே!! இல்லே!!! இல்லவே இல்லே என்றே கூறிடலாம். அதுவும் எந்த வேதம் முதலில் தோன்றியது? எந்த வேதத்தை எந்த நேரத்தில் ஓத வேண்டும்?? எந்த வேதத்தை எதற்குப் பயன்படுத்த வேண்டும்??? எந்த வேதத்திற்கு எந்தெந்த ஆண்டவர்! தெய்வம்! தேவர்! தேவதை! கடவுள்!.... பயன்படுத்தப்பட வேண்டும்?... என்ற விவரங்களே யெல்லாம் தெரிந்தவர்கள் அநேகமாக விரல்விட்டு எண்ணக் கூடிய அளவில் மிகமிகச் சிலரே இன்றைக்கு உள்ளனர்.

இப்படிப்பட்ட நிலே, அதாவது, இந்துவேத நூல்களேயோ, இந்துமத நூல்களேயோ பற்றி முழுமையாகச் செவிவழிச் செய்தியாகக் கூடத் தெரிந்தவர்கள் அநேகமாக விரல்விட்டு எண்ணக் கூடிய அளவினர் கூட இல்லாத நிலேதான் நமது இந்துக்களின் நிலே. - இப்படிப்பட்ட ஏதும் தெரியாத, அப்பாவியான இந்துக்களிடையேதான், நாத்திகர்கள் தோன்றித் தங்களுடைய கண்மூடித்தனமான, காட்டுமிராண்டித்தனமான, நாத்திகவாதங்களேயும், ஆத்திக எதிர்ப்புக்களேயும் இந்துமத எதிர்ப்பு, மறுப்பு, வெறுப்பு, பகைப்பு, இழிப்பு, பழிப்புச் சொற்போரையும் நிகழ்த்திட்டார்கள்! நிகழ்த்திட்டார்கள்!! நிகழ்த்திட்டார்கள்!!!

c) அதாவது, கையில் எந்த விதமான ஆயுதமும் இல்லாமல் போர் நடக்கப் போகிறது என்பது கூடத் தெரியாமல்; மாபெரும் படை திடீர்த் தாக்குதல் நிகழ்த்திஞல், தாக்கப்பட்டவர் நிலே எப்படி அலங்கோலமாகவும், அவலமாகவும் அலறியடித்தபடி நாலாபக்கமும் சிதறி ஓடிப் பதுங்குவதாகவும், எள்முனேயளவு கூட படைக்கு எதிர்ப்பில்லாமல் போகவும் நேரிடுவது போலத்தான் நாத்திகர்கள் ஆத்திகர்கள் மீது நிகழ்த்திட்ட தாக்குதல்கள். அதாவது, நம் நாட்டைப் பொறுத்தவரை, நாத்திகர்களுக்கு எந்தவிதமான நேரடி மறுப்போ! எதிர்ப்போ!! தாக்குதலோ!!!..... ஆத்திகரிடமிருந்து ஏற்பட்டதில்லே! ஏற்பட்டதில்லே!! ஏற்பட்டதில்லே!!! ஏற்பட்டதே இல்லே.... இதுதான் உண்மை! உண்மை!! உண்மை!!! எனவேதான், நாத்திகர்களே கலேத்துறை, சமுதாயத்துறை, அரசியல்துறை... முதலிய அனேத்துத் துறைகளிலும் முழுமையாக ஆட்சி செலுத்தும் நிலே இத்திருநாட்டில் உண்டாகி விட்டது. எனவே, நாத்திகர்களேப் பற்றி முறையான ஆய்வுகளே முழுமையாகவும், நிறையாகவும் நிகழ்த்தித்தான் இத் திருநாட்டில் ஆத்திகரை விழிச்சியுறச் செய்து, எழிச்சி பெறச் செய்து, தேவையான பயிற்சிகளே நிறைவாகப் பெற்று, இந்துவேத வளவளர்ச்சிக்காகவும், இந்துமத மறுமலர்ச்சிக்காகவும், இந்துமத ஆட்சிமீட்சிக்காகவும் உரிய முயற்சிகளேச் செய்யுமாறு செய்ய முடியும்! செய்ய முடியும்!! செய்ய முடியும்!!!

d) நம் நாட்டு நாத்திகர்கள்; அதாவது இந்துமத நாத்திகர்கள், இந்தியாவில் உள்ள நாத்திகர்கள்... உலக நாத்திகர்களிலிருந்து வேறுபட்டவர்கள்! வேடிக்கையானவர்கள்!! மாறுபட்டவர்கள்!!! முரண்பட்டவர்கள்!!!! தனித்தன்மை பெற்றவர்கள்.... அதாவது இந்துமதத்தைச் சேர்ந்த இந்திய நாத்திகர்கள், "இந்துமத வரலாறு, புராணங்கள், இதிகாசங்கள், அருளாளர்கள், அற்புதங்கள், மாயங்கள், திருவிளேயாடல்கள், சடங்குகள், சாத்தரங்கள், சாத்திரங்கள், சாத்திறங்கள், சம்பிறதாயங்கள், விரதங்கள், திருநாள்கள், திருவிழாக்கள் கொள்கைகள், குறிக்கோள்கள், கோயில்கள், கடவுள்கள், ... முதலிய அனேத்தையுமே கண்மூடித்தனமாகப் பொய்யென்றும், புளுகென்றும், மடமையென்றும், மூடநம்பிக்கையென்றும்,

முட்டாள்தனமானது என்றும், பகுத்தறிவுக்கு ஒவ்வாதது என்றும், முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையென்றும் ... தாக்குகிறார்கள், இழிவுபடுத்துகிறார்கள், எதிர்க்கிறார்கள், மறுக்கிறார்கள், பகைக்கிறார்கள், நகைக்கிறார்கள், வெறுக்கிறார்கள்.... ஆனால், ஆனால், ஆனால், இந்த நாத்திகர்கள் இந்துமதம் தவிர, மற்ற எல்லா மதங்களையும் மறுக்காமல், வெறுக்காமல், எதிர்க்காமல், பகைக்காமல், நகைக்காமல்... ஏற்றுக் கொள்ளுகிறார்கள்! ஏற்றுக் கொள்ளுகிறார்கள்!! ஏற்றுக் கொள்ளுகிறார்கள்!!!.... இன்னும் சொல்லப் போனால், இந்த இந்துமத நாத்திகர்கள், "இந்துமதம் தவிர, மற்ற எல்லா மதங்களும் வரலாற்றுப் பூர்வமானவை! பகுத்தறிவுப் பூர்வமானவை!! விஞ்ஞானப் பூர்வமானவை!!! உண்மையானவை!!!! மடமையற்றவை!!!! மூடநம்பிக்கையற்றவை!!!! முன்னேற்றத்துக்கு உதவுபவை!!!! என்றெல்லாம் மனம் குளிர, சிந்தை களிகூரப் பேசுகிறார்கள்! பேசுகிறார்கள்!! பேசுகிறார்கள்!!! பேசிக் கொண்டே இருக்கிறார்கள்!!!! ....

இவற்றையெல்லாம் விட வெட்கக்கேடான, மானக்கேடான, முறைகேடான, மோசமான, மோசடியான செயலொன்றினை, இந்த இந்துமத நாத்திகர்கள்; 'நாத்திகர்' என்று சொல்லப் படுபவர்களுக்கு மத நம்பிக்கை, கடவுள் நம்பிக்கை, பூசை நம்பிக்கை, மதவிழாக்களில் நம்பிக்கை.... எனப்படும் நம்பிக்கைகள் அனைத்துமே இருக்கக் கூடாது! இருக்க முடியாது....' என்ற அடிப்படைக் கொள்கையையே மறந்தும், துறந்தும், மறுத்தும் வெறுத்தும், புறக்கணித்து ஒதுக்கியும் செயல்படுகிறார்கள். அதாவது, இந்த இந்துமத நாத்திகர்கள் மாற்று மதங்களை ஏற்றுக் கொள்கிறார்கள்! மாற்றுமதக் கடவுள்களை ஏற்றுக் கொள்கிறார்கள்! மாற்றுமதக் கோயிலுக்குச் செல்கிறார்கள்! மாற்றுமத விழாக்களிலும், திருநாள்களிலும், சடங்குகளிலும் தாராளமான பத்தியோடு கலந்து கொள்கிறார்கள்! கலந்து கொள்கிறார்கள்! கலந்து கொள்கிறார்கள்! கலந்து கொண்டே வருகிறார்கள்!!!

இப்படிப்பட்ட செயல்களைக் கொண்டு ஆராயும்போதுதான்; இந்த இந்துமத நாத்திகர்கள் அனைவருமே அன்னிய மதங்களின் கைக்கூலிகள்! கங்காணிகள்!! அன்னிய மதங்களின் கைக்கூலிகள்! கங்காணிகள்!! அன்னிய மதங்களின் கைக்கூலிகள்! கங்காணிகள்!! .... அன்னிய மதங்களிடம் பணமும், பதவியும், புகழும் பெற்றுக் கொண்டு தங்களுடைய தாய்மதமான இந்துமதத்தை இழித்தும், பழித்தும், சிதைத்தும் சீரழித்து அன்னிய மதங்களின் வளர்ச்சிக்காகவும், வலிமைச் செழிச்சிக்காகவும், கங்காணிகளாக கைக்கூலிகளாகச் செயல்படும் இந்துமதத் துரோகிகளே இந்துமத நாத்திகர்கள்! இந்துமதத் துரோகிகளே இந்துமத நாத்திகர்கள்!! இந்துமதத் துரோகிகளே இந்துமத நாத்திகர்கள்!!! ....

இப்பேருண்மையினை, எல்லா மக்களும் தெரிந்து புரிந்து தெளிந்திடும்படிச் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் பொதுமக்களும் ஆத்திகர்களும் நாத்திகர்களை நேருக்கு நேர் சந்தித்து; அவர்களுடைய கங்காணிப் போக்கை, கைக்கூலிப் போக்கை, துரோகச் செயல்களை எடுத்துரைத்து அவர்களைத் தொடர்ந்து செயல்பட விடாமல் தடுக்க வேண்டும்! தடுக்க வேண்டும்!! தடுக்க வேண்டும்!!! தடுத்தேயாக வேண்டும்! தடுத்தேயாக வேண்டும்!! தடுத்தேயாக வேண்டும்!!! அதுதான், விளையும் பயிர்களுக்கிடையே உள்ள களைகளை வேரோடு பறித்தெடுப்பதன் மூலம், பயிர் நன்கு செழித்து வளரச் செய்வது போல; நாத்திகர்களைச் செயல்படாமல் தடுத்து அகற்றுவதே ஆத்திகப் பயிரைச் செழித்தோங்கச் செய்யும்! செழித்தோங்கச் செய்யும்!! செழித்தோங்கச் செய்யும்!!!

## e) நாத்திகர்கள் பெருகியது ஏன்?

நம் நாடு இந்துமதத்தின் கொள்கைகளாலும், நம்பிக்கைகளாலும், மரபுகளாலும், சட்டதிட்டக் கட்டுப்பாடுகளாலும், பழக்க வழக்கங்களாலும், விரதங்களாலும், சாத்தர, சாத்திர சாத்திரச்

சம்பிறதாயச் சடங்குகளாலும், திருநாள் நெறிமுறைகளாலும், திருவிழா விதிமுறைகளாலும், மனித சமுதாயத்தில் நீதி, நேர்மை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, பிறர்க்கு உதவுதல், பொதுச்சொத்துக்களைப் பாழாக்காமை, களவு திருடு பொய் கொலை கொள்ளை... முதலியவை செய்யாமை... முதலிய நற்பண்புகள் நன்கு முளைத்துக் கிளைத்துச் செழித்து வளமாக வளர்த்தன. அத்துடன் தனிமனித வாழ்வில் அன்பு, அறம், இரக்கம், பரிவு, பொறுமை, பொறுப்பு, அமைதி, பிறர்க்கு உதவுதல், தோழமை, நட்பு, உறவு, கடமையுணர்வு, பெரியோரைப் பேணுதல், மூத்தவர்களை மதித்தல், சிறியோரையும், வறியோரையும் பரிவுடன் பாதுகாத்தல், மொழிப்பற்று, இனப்பற்று, நாட்டுப்பற்று ... முதலிய பண்புகள் என்றென்றும் பசுமையாக வளர்க்கப் பட்டன.

ஆனால்! ஆனால்!! ஆனால்!!! இந்துமதத்தை மறுக்கும் நாத்திகக் கொள்கைகள், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், வாழ்வியல் போக்குகள், நடைமுறை நெறிகள், கருத்துக்கள்.... முதலியவை ஒவ்வொரு நாத்திகனும் தன் விருப்பம் போல் வாழலாம். நாத்திகன் யாரையும் மதிக்கவோ, போற்றவோ, பணியவோ, ஆதரிக்கவோ தேவையில்லை. நாத்திகர்களுக்கு எந்தவித நீதியோ, நேர்மையோ, விதியோ, சமுதாயக் கட்டுப்பாடோ, பழக்கவழக்க நெறிமுறையோ கிடையாது. நாத்திகனுக்கு உறவுமுறை விதிகளோ, பண்பாடோ, மரபோ, ஒழுக்கமோ கிடையாது. நாத்திகன் களவு, திருடு, பொய், கொலை, கள்ளச்சந்தை, கையூட்டு, துரோகம்... முதலிய அனைத்தையும் செய்யலாம்; நாத்திகனுக்கு மொழிப்பற்றோ, இனப்பற்றோ, நாட்டுப்பற்றோ கிடையாது. நாத்திகனுக்கென்று எந்த ஒழுக்க விதியும் கிடையாது; நாத்திகன் தன்னலவெறி, பதவிவெறி, பணவெறி, புகழ்வெறி கொண்டு எதையும் செய்து எப்படியும் வாழலாம்; நாத்திகன் எதற்கும் கட்டுப்படத் தேவையில்லை; நாத்திகன் தன் விருப்பம்போல் எதையும், எப்போதும் செய்யலாம்; நாத்திகன் மனச்சாட்சி இல்லாமல் வாழலாம், நாத்திகன் எல்லாக் கள்ளச்சந்தைச் செயல்களையும், துரோக விரோதச் செயல்களையும், ஒழுக்கக்கேடுகளையும், முறைகேடுகளையும், குடிபோதையிலேயே செய்யலாம்; குடிபோதை இல்லாமலும் செய்யலாம்... இப்படி அனைத்து வகையான உரிமைகளும் பெற்ற கட்டுப்பாடற்ற, கவலையற்ற, அச்சகூச்சமற்ற வாழ்க்கையே நாத்திக வாழ்க்கை. எனவேதான், 'எல்லாப் பேராசைக்காரர்களும், தன்னலவெறியர்களும், தான்தோன்றிகளும், குறையுடையவர்களும், குற்றவாளிகளும், முறைகேடர்களும், தவறுகளைச் செய்பவர்களும்.... தங்களை மதத்தின் நீதி, நேர்மை, ஒழுக்கம், கட்டுப்பாடு, உண்மை, அடக்கம்.... முதலிய சட்டதிட்டக் கட்டுப்பாடுகளிலிருந்து விடுவித்துக் கொள்வதற்காகவே, தங்களை நாத்திகர்களாக அறிவித்துக் கொள்ளுகிறார்கள். அல்லது நாத்திகர்கள் போல நடிக்க ஆரம்பித்து விடுகிறார்கள்'.

## f) 'நம் நாட்டு நாத்திகரின் போலி நிலை'

நம் நாட்டு நாத்திகர்கள் வாய்ப்பேச்சில் மட்டுமே நாத்திகர்களாக இருப்பவர்கள். அதாவது, 'நம் நாட்டு நாத்திகர்கள் அனைவருமே, மனத்தளவிலும், வீட்டளவிலும் கடவுள் பத்தர்களே! சாமி கும்பிடுகிறவர்களே! மதச்சடங்குகளையும், சாத்திரங்களையும் கடைப்பிடிப்பவர்களே! நம்புகிறவர்களேயாவார்கள். இன்னும் சொல்லப் போனால், நம் நாட்டு நாத்திகர்களில் அன்றாடம் பூசை செய்பவர்களும், அன்றாடம் தங்களுக்காகத் தங்களுடைய குடும்பத்தார்களையோ! அல்லது உறவினர்களையோ! அல்லது நண்பர்களையோ! அல்லது கழகத்தவர்களையோ தங்களுக்காக அன்றாடம் பூசை செய்யுமாறு ஏற்பாடு செய்து கொள்ளுபவர்களுமாகவே வாழுகிறார்கள். எனவே, நம் நாட்டு நாத்திகர்கள், தாங்கள் தங்கள் விருப்பம் போல், தவறுகளையும், குற்றங்களையும், அநீதிகளையும், ஒழுக்கக் கேடுகளையும், முறைகேடுகளையும், ... தொடர்ந்து செய்வதற்காகவே தங்களை நாத்திகர் என்று

அறிவித்துக் கொண்டு போலியான நாத்திகர்களாக வாழுகிறுர்கள். எனவேதான், இவர்கள் எல்லாவிதமான துரோகச் செயல்களையும், விரோதச் செயல்களையும், கள்ளச் சந்தைகளையும், கொலை கொள்ளை முதலியவைகளையும்... தொடர்ந்து செய்து வருகிறுர்கள்! செய்தே வாழுகிறுர்கள்! எனவேதான், இந்த நாத்திகர்களால் இலக்கியம், கலை, சமுதாயம், அரசியல்... முதலிய அனைத்துத் துறைகளிலும் கண்மூடித்தனமான வேகத்தில் செயல்பட முடிகிறது. இப்படிப்பட்ட இவர்கள் கோயில்களைக் கொள்ளையடிக்கவும், சிலைகளைத் திருடி விற்கவும், கோயில் சொத்துக்களை ஆக்கிரமித்துக் கொள்ளவும், மதவாதிகளைத் தாக்கித் தகர்த்தழிக்கவும் முற்படுகிறுர்கள். எனவேதான், ஆத்திகர்கள் இந்த நாத்திகர்களைக் கண்டு அஞ்சுகிறுர்கள்.

## g) ஆத்திகமும் நாத்திகமும்:

ஆத்திகர்களில் ஒரு சில கெட்டவர்கள், தவறுனவர்கள், குறையுடையவர்கள், முறைகேடர்கள்... இருக்கத்தான் செய்வார்கள். அதுதான் உலக இயற்கை. ஆனுல், இந்த ஒரு சிலரையே எடுத்துக்காட்டாகச் சுட்டிக்காட்டி ஆத்திகர் அனைவருமே தவறுனவர்கள், குறையுடையவர்கள்... என்ற குற்றச்சாட்டை நாத்திகர்கள் மிக எளிதாகப் பரப்புகிறுர்கள்! பரப்பிடுகிறுர்கள். இதனுல், ஆத்திகர்களைப் போலியானவர்கள், ஏமாற்றுக்காரர்கள், வேடதாரிகள்.... என்று விளம்பரப்படுத்தி விமர்சிக்கிறுர்கள் இந்த நாத்திகர்கள். ஆனுல், நாத்திகரில் விரல்விட்டு எண்ணக் கூடிய அளவு ஒருசிலர் மட்டுமே நல்லவர்கள். மற்றபடி அனைவருமே கெட்டவர்கள், கொடியவர்கள், மோசமானவர்கள், மோசடிக்காரர்கள், பேராசைக் காரர்கள், எல்லாத் தவறுகளையுமே மனச்சாட்சியின்றி செய்யக்கூடியவர்கள்... என்ற தகுதியினரேயாவர்.

எனவேதான், 'நாத்திகர்கள் தங்களுடைய தவறுகளையும், குற்றங்களையும், பித்தலாட்டங்களையும், தில்லுமுல்லுகளையும், அடாவடிச் செயல்களையும்... பொதுமக்கள் கண்டுபிடித்து விடக்கூடாது என்பதற்காகத்தான், இவர்கள் எந்நேரமும் ஆத்திகர்களையும், கடவுள்களையும், புராண இதிகாசங்களையும், மதச் சடங்குகளையும், பழக்க வழக்கங்களையும் கண்மூடித்தனமாகக் காட்டுமிராண்டித்தனமான வாசகங்களால் விமர்சிப்பதும், கேலி செய்வதும், கிண்டல் செய்வதும், இழித்துப் பழித்துப் பேசுவதுமாகக் காலங்கடத்துகிறுர்கள். இப்படிப்பட்ட இவர்களைக் கண்டு மிகவும் அப்பாவிகளான, நல்லவர்களான, மென்மைப் பண்புகள் மிகுந்த கூச்ச உணர்வு மிக்க, மான உணர்வுள்ள, மனச்சாட்சியுடைய ஆத்திகர்கள் எதிர்க்கவே பயந்தார்கள்! பயந்தார்கள்!! பயந்தார்கள்!!! பயந்து கொண்டே இருக்கிறுர்கள்!!!! இருப்பார்கள்!!

எனவேதான்!, எனவேதான்!, எனவேதான்! ... நாத்திகர்களின் முகத்திரைகளைக் கிழிக்கவும், மாறுவேடங்களைக் களைந்தெறியவும், அவர்களின் உண்மையான வடிவை உலகுக்குக் காட்டவும், ... மாபெரும் முயற்சிகளைத் தொடர்ந்து செய்தேயாக வேண்டும். அதற்காகத்தான், பொதுமக்களுக்கும், ஆத்திகப் பெருமக்களுக்கும், நாத்திகர்களின் உண்மையான அவலக்கேவல நிலைகளையும், மோசடிப் போக்குகளையும், துரோக விரோதச் செயல்களையும்.... முழுமையாக விளக்கியுரைத்து ஆத்திகர்களையும், பொதுமக்களையும் நாத்திகர்களை எதிர்த்துப் போராடி; இந்துவேதத்தையும், இந்துமதத்தையும் காப்பாற்றும் அரிய பெரிய பணியைத் துவக்கியிருக்கிறுர் பதினெண்சித்தர் மடாதிபதி, அந்தணர் அண்ணல், ஞாஞச்சாரியார். இப்பணியைத் தனியொரு மனிதராக இருந்து செய்தால் எதிர்பார்க்கும் பயன் முழுமையாக விளையாது என்பதோடு; அப்பயன் அனைவராலும் உணரப்பட்டுப் பயன்படுத்தப்பட முடியாமல் போய்விடுமே என்பதை எண்ணித்தான், அந்தணர் அண்ணல், ஞாஞச்சாரியார், "இந்துக்களே! இந்துவேதத்தையும், இந்துமதத்தையும் புரிந்து கொள்ளுங்கள்", "இந்துக்களே! தமிழர்களே! தமிழாசிரியர்களே! உடனேயே இந்துவேத

ஆச்சாரியாராகுங்கள்"... என்ற அறிவிப்பு அழைப்பைத் தொடர்ந்து விடுக்கிருர்! விடுக்கிருர்!! விடுக்கிருர்!!! விடுத்துக் கொண்டே இருக்கிருர்! ஆனால், நம் மக்களில் பெரும்பாலானவர்கள் 'தாங்கள் நாத்திகரா? அல்லது ஆத்திகரா?' என்று எண்ணிப் பார்த்து முடிவு செய்யத் தெரியாத அப்பாவிகளாகவே இருக்கிருர்கள்! இருக்கிருர்கள்!! இருக்கிருர்கள்!!!

எனவேதான், அரசியல்வாதிகளில் பெரும்பாலானவர்களாக உள்ள நாத்திகர்கள், இந்துக்களுக்கு விழிப்புணர்வு ஏற்பட்டு விடாமலிருக்கும் வண்ணம்

1. 'இந்துமத வெறி கூடாது',

2. 'இந்துமத உணர்ச்சி சட்ட விரோதமானது',

3. 'இந்துமதப் பற்று தேச விரோதமானது',

4. 'இந்துக்களுக்கென்று எந்தவகையான நிறுவன நிர்வாகமும் இருக்கக் கூடாது',

5. 'இந்துமதத்தவர் மற்ற மதத்தவர்களுக்கு எல்லாவித உரிமைகளையும் வசதி வாய்ப்புக்களையும் பெருமைகளையும் விட்டுக் கொடுக்க வேண்டும்'

6. 'இந்துக்கள் மற்ற மதத்தவர்களுக்குக் கட்டுப்பட்டு அடிமைகளாகத்தான் வாழ வேண்டும்',

7. 'மாற்று மதத்தவர்கள் மதத்தின் பெயரால் எதைச் செய்தாலும், இந்துக்கள் ஊமைகளாகத்தான் வாழவேண்டும்',

8. 'இந்துக்களின் ஒற்றுமையை உருவாக்க முயற்சிப்பது மாபெரும் தேச விரோத துரோகச் செயலாகும்',

9. 'இந்துமத விழாக்களை இந்துக்கள் அடக்க ஒடுக்கமாக, மாற்றுமதத்தவர் எத்தகைய இடைஞ்சலும் சிரமமும் அடையாமல், அமைதியாக... நடத்த வேண்டும்'

10. 'வெளிநாட்டிலிருந்து இங்கு வந்திட்ட அன்னிய மதத்தை ஏற்று வாழுகிற மாற்று மதத்தவர் வாழுகிற பகுதிக்கு இந்துக்களின் ஊர்வலமோ, திருவிழாக் கூட்டமோ, திருவிழாவின் இன்னிசையோ, இனிய ஒலிகளோ செல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்',

11. 'அன்னிய மதத்தவர்களை அதிகமாக மதித்துப் போற்றிப் பணிந்து வாழுபவர்களாகத்தான் இந்துக்கள் இருக்க வேண்டும்',

12. 'அரசியல் சட்டப்படி எல்லாவிதமான பாதுகாப்புக்களும், சலுகைகளும், விதிவிலக்குகளும், உதவிகளும், சிறப்பு அனுமதிகளும் மாற்று மதத்தவர்களுக்கு மட்டுமே வழங்கப் படும். அப்பொழுதுதான் மதப் போட்டிகளையும், போராட்டங்களையும், சண்டைச் சச்சரவுகளையும் தவிர்க்க முடியும்'

13. இந்த நாட்டுக்கு வந்த அன்னிய மதங்கள் தங்கள் விருப்பம் போல் மதமாற்ற வேலைகளைச் செய்து, இந்துக்களை அன்னிய மதத்தவர்களாக்கி, அன்னிய நாட்டவர்களாகவே மாற்றும் வேலை தொடர்ந்து நடந்தாலும் இந்துக்கள் அவர்களை நேரடியாக எதிர்த்துச் செயல்பட்டு விடக்கூடாது',

14. 'இந்துக்களுடைய கோயில்கள், மடங்கள், அறக்கட்டளை நிறுவனங்கள் அனைத்தும் அரசின் நேரடிக் கண்காணிப்புக்கும், தணிக்கைக்கும் உட்பட்டுத்தான் இருக்க வேண்டும். ஆனால், இதுபோல் மாற்றுமதங்களின் நிறுவன நிர்வாகங்களையும், சொத்துக்களையும் அரசாங்கத் தணிக்கைக்கும், கட்டுப்பாட்டுக்கும் உரியதாக்கிடக் கூடாது. ஏனெனில், அது அவர்களுக்கு வருத்தத்தைத் தந்துவிடக் கூடும்'....

என்று இப்படி நமது அரசியல்வாதிகள், மாற்று மதத்தவர்களைப் போற்றிப் போற்றிப் பாதுகாத்திடுகிருர்கள். இதற்குக் காரணம், நமது குடியாட்சி அரசியல் முறையில் நிகழும் தேர்தலில், அன்னிய மதத்தவர்களின் வாக்குச் சீட்டுகளைத் தங்கள் தங்களுடைய அரசியல் கட்சிகளுக்கு, கழகங்களுக்கு, இயக்கங்களுக்குப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற பேராசையால்தான், நமது அரசியல்வாதிகள், போட்டிபோட்டுக் கொண்டு அன்னிய

மதத்தவரை ஆதரிக்கிறார்கள்! போற்றுகிறார்கள்! பாதுகாக்கிறார்கள்!

எனவே, நமது நாட்டரசியல் பற்றிச் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் நாம். அதற்கு முன் நமது இந்துக்களுக்கு, இன்றைய இந்துவேத நிலை, இந்துமத நிலை, இந்துக்களின் நிலை, இந்துக்களின் சமுதாய நிலை, இந்துக்களின் அரசியல் நிலை, இந்துக்களின் வருங்கால நிலை... முதலியவைகளைப் பற்றி நன்கு எண்ணிப் பார்க்கவும், சிந்திக்கவும், எச்சரிக்கை மிகு ஆராய்ச்சிகளை நிகழ்த்தவும் கற்றுக் கொடுக்க வேண்டும்! கற்றுக் கொடுக்க வேண்டும்!! கற்றுக் கொடுக்க வேண்டும்!!! இல்லாவிட்டால், ஒருகாலத்தில் இந்த உலகம் முழுதும் பரவி ஆட்சி செய்திட்ட இந்துவேதமும், இந்துமதமும், இன்றைக்கு இந்தியா என்ற ஒரே ஒரு நாட்டுக்குள் மட்டும் வாழுகின்ற நிலைக்கும் முடிவு வந்துவிடும்! முடிவு வந்துவிடும்!! முடிவு வந்துவிடும்!!! அது தேவைதானா? அது தேவைதானா? அது தேவைதானா? ... என்ற வினாவை ஆயிரமாயிரம் முறை தனக்குள் எழுப்பியும், தான் சந்திக்கும் ஆயிரமாயிரம் மக்களிடம் நேரடியாகவே எழுப்பியும் பெற்றிட்ட பதிலால்தான்! பதிலால்தான்!! பதிலால்தான்!!! இந்துமதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரியக் குருபீடக் குருதேவர், இந்துவேதத்தை இம்மண்ணுலகுக்கு அருளிய பதினெண்சித்தர் மடத்தின் மடாதிபதி, இந்துமதத்தை இம்மண்ணுலகில் தோற்றுவித்த பதினெண்சித்தர் பீடத்தின் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் அவர்கள்

1. “இந்துக்களே! இந்துவேதத்தையும் இந்துமதத்தையும் காப்பாற்ற முன்வாருங்கள்”

2. “இந்துக்களே! இந்துக்களைக் காப்பாற்றும் பயிற்சிகளையும், முயற்சிகளையும் தெரிந்து கொள்ளுங்கள்”

3. “இந்துக்களே! இந்துவேதத்தைக் கற்றுக் கொள்ளுங்கள், இந்துக்களை ஒற்றுமைப் படுத்துங்கள்”

4. “இந்துக்களே! இந்துவேத வழியில் இந்துக்களாக வாழக் கற்றுக்கொள்ளுங்கள்”

5. “இந்துக்களே! இந்துவேதத்தையும், இந்துமதத்தையும் புரிந்து கொள்ளுங்கள்”

6. “இந்துக்களே! இந்துவேத ஆச்சாரியாராக! இந்துமதச் சாத்திரியாராக! தோத்திரியாராக! மாறுங்கள்”

7. “இந்துமதம் காக்கத் தமிழர்களே! தமிழாசிரியர்களே! உடனேயே இந்துவேத ஆச்சாரியாராகுங்கள்”

8. “இந்துக்களே! இந்து வேத ஆச்சாரியாராகிடப் பயிற்சி பெற வாருங்கள்! வாருங்கள்!! வாருங்கள்!!!

9. “இந்துக்களே! ஆச்சாரியாராக! சாத்திரியாராக! தோத்திரியாராகப் பயிற்சி பெற முயற்சியுங்கள்”

10. “இந்துக்களே! அயர்ச்சி யகற்றி உயர்ச்சி பெற ஆச்சாரியாராகுங்கள்”

11. “இந்துக்களே! தளர்ச்சியகற்றி வளர்ச்சியுற்றிட ஆச்சாரியாராகுங்கள்”

12. “இந்துக்களே! வீழ்ச்சி, தாழ்ச்சி, அகற்றி எழுச்சி செழிச்சி பெற்றிட ஆச்சாரியாராகுங்கள்”



**குவலய குருபீடம்,**
**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி**
**ஞாலகுரு சித்தர் அரசயோகி கருவூரார்**

# நிறைவுரை

(12) (அ) இந்த இந்துவேத முன்னுரை பன்னிரண்டு பகுப்புகளில், பிரிவுகளில், தலைப்புகளில் மிகத் தெளிவாக எண்ணிக்கையிடப்பட்டு எழுதப்பட வேண்டுமென்பது இந்துவேத மரபாகும். அதன்படியே, பதினேரு எண்ணிக்கைக்குரிய தலைப்புக்களில், உலகத்தவர்களும், இந்தியர்களும், இந்துக்களும், தமிழர்களும், தமிழாசிரியர்களும்.... தெரிந்து கொள்ள வேண்டிய கருத்துக்களும், விளக்கங்களும் எழுதப்பட்டுள்ளன! எழுதப்பட்டு விட்டன!. இந்தப் பன்னிரண்டாவது எண்ணிக்கைக்குரிய பகுதி இந்த நூலுக்கு நிறைவுரையாக, முடிவுரையாக எழுதப்படுகிறது. இந்த நூலுக்கு 'இந்துக்களே! இந்துவேதத்தையும், இந்துமதத்தையும் புரிந்து கொள்ளுங்கள்! இந்துக்களே! தமிழர்களே! தமிழாசிரியர்களே! உடனேயே இந்துவேத ஆச்சாரியாராகுங்கள்!' என்று பல தலைப்புக்கள் கொடுக்கப்படுகின்றன. இப்படி பல தலைப்புக்களைப் பெற்றுள்ள இந்த நூல், இந்த இந்துக்களுக்கும், இந்த இந்து சமுதாயத்திற்கும், இந்த இந்துவேத, இந்துமத நாட்டிற்கும், மிகச் சிறந்த இன்றியமையாத அரிய, பயன்களைப் பெரிய அளவில் விளைவித்துக் கொடுக்கும் ஆற்றலுடையதாகும். எனவேதான், இந்துமதத்தின் முழுமுதல் தலைவர்களாகிய பதினெண்சித்தர் பீடாதிபதிகள் எழுதிய, எழுதி வருகின்ற குருபாரம்பரியம், இலக்கிய பாரம்பரியம், அரசபாரம்பரியம் எனும் முப்பெரும் நூல்களிலிருந்து அப்படியே கருத்துக்களையும், செய்திகளையும், வாசகங்களையும் எடுத்துக் கையாண்டு இந்த பன்னிரண்டாவது பகுதி உருவாக்கப் படுகின்றது.

(ஆ) குமரி முதல் வட இமயத்தின் விளிம்புவரை, விரிந்து பரந்து கிடக்கக் கூடிய இந்துவேத இந்தியாவின் மக்களை ஒரே வகைப்பட்ட வாழ்வியல் உணர்வும், எண்ணமும், சிந்தையும், செயலும் உடையவர்களாக மாற்றியே தீரவேண்டும். அதாவது, இந்திய நாட்டு மக்கள் அனைவரையும், ஒரே இழையில், நூலில் இணைக்கப் பட்டவர்களாக ஆக்க வேண்டும். அது இந்துவேத நூலேயாகும்.

(இ) அதாவது இந்துவேத விடுதலைக்காகவும், இந்துமத விடுதலைக்காகவும் இந்துக்கள் அனைவரையும் கருத்தளவில் புதிய விழிச்சியும், எழிச்சியும் பெற்று எழச் செய்ய வேண்டும். அப்படி எழுகின்றவர்களுக்கு இந்துவேத நூல்களில் பயிற்சியும், இந்துமத வாழ்வியல் நடைமுறைக் கொள்கைகளிலும், கோட்பாடுகளிலும், நம்பிக்கைகளிலும், பழக்க வழக்கங்களிலும் பயிற்சியும் வழங்க வேண்டும். அப்பொழுதுதான், இந்துவேத விடுதலைக்காகவும், இந்துமத விடுதலைக்காகவும் தேவையான முயற்சிகள் செழிச்சியடையும், உயர்ச்சியடையும், எழிச்சி மிக்க ஆட்சி பெறும். இதற்குத் தேவை அரசியல் மாற்றங்களே யாகும்! அரசியல் மாற்றங்களே யாகும்!! அரசியல் மாற்றங்களே யாகும்!!!

(ஈ) இந்துவேத விடுதலைக்கும், இந்துமத விடுதலைக்கும் வட இமயமலை விளிம்பு முதல் தென்கோடிக் கன்னியாகுமரிக் கடற்கரை மணற்பரப்பு வரை வாழுகின்ற மக்கள் அனைவரும் ஒன்று திரட்டப்பட வேண்டும். ஒற்றுமைப்படுத்தப் படவேண்டும். அதற்காக மொழியின் அடிப்படையிலும், இயற்கைக் கூறுபாடுகளின் அடிப்படையிலும், அரசின் ஆட்சி முறையின் காரணமாகவும்... பல்வேறு மாநிலங்களாகப் பிரிக்கப் பட்டுள்ள இந்திய நாட்டு மாநிலங்களுக்கிடையே 'ஒரு புதிய இணைப்புச் சத்தி' தோற்றுவிக்கப் பட்டாக வேண்டும்! தோற்றுவிக்கப் பட்டாக வேண்டும்!! தோற்றுவிக்கப் பட்டாக வேண்டும்!!!

(உ) அப்படி, இந்திய நாட்டு மாநிலங்களின் ஒருங்கிணைப்புச் சத்தி ஒன்று புதிதாகத் தோற்றுவிக்கப் படுகிறதென்றால், அந்தச் சத்தி இந்திய மண்ணில் ஆழமாக வேரூன்றி என்றென்றும் பசுமையாக விளங்கக் கூடிய பண்பாட்டுக் கூறுபாடுகளையும், நாகரீகக் கூறுபாடுகளையும் பெற்றிருக்க வேண்டும். அதற்கு இந்துவேத நூல்களும், இந்துமத நூல்களும்தான் அடிப்படையாக, ஆதாரமாக, கருவாக, தாயாக இருக்க முடியும். மேலும்,

அந்த இணைப்புச் சத்தி எல்லா மாநிலத்தவர்களாலும், போற்றிப் பேணிப் பாதுகாத்து வளர்க்கப்பட வேண்டிய ஒன்றாக இருக்க வேண்டும். அதற்காக எல்லாவகையான கல்வி நிறுவனங்களையும், கலை நிறுவனங்களையும் சேர்ந்த ஆசிரியர்கள், போதகர்கள், ஆச்சாரியார்கள், பொறுப்பாளர்கள்... முதலியோர் அனைவரும் அறிவு விழித்த நிலையில், இந்தியப் பண்பாட்டிலும், நாகரீகத்திலும் ஆழ்ந்த பற்றும், பிடிப்பும் முழுமையான நம்பிக்கையும் அளப்பரிய ஆர்வமிகு ஈடுபாடும் உடையவர்களாகச் செயல்பட வேண்டும்! செயல்பட வேண்டும்!! செயல்பட வேண்டும்!!! செயல்பட்டேயாக வேண்டும்!... ஆனால்! ஆனால்!! ஆனால்!!! அந்த மாபெரும் பொறுப்பை இந்துமதத் தலைவர்கள், மடாதிபதிகள், பீடாதிபதிகள், ஆச்சாரியார்கள், இந்துவேதப் பாடசாலைகளின் ஆசிரியர்கள், ஓதுவார்கள், பூசாறிகள், குருக்கள், குருமார்கள், குருதேவர்கள், சாத்திரியார்கள், தோத்திரியார்கள்... முதலியவர்கள் மட்டுமே! முதலியவர்கள் மட்டுமே!! முதலியவர்கள் மட்டுமே!!! செய்ய வேண்டுமென்று கருத்தளவில் கூட முடிவெடுக்கக் கூடாது! முடிவெடுக்கக் கூடாது! முடிவெடுக்கக் கூடாது! ஏனென்றால், இந்துவேதம் விடுதலை பெறவேண்டும், இந்துமதம் விடுதலை பெற வேண்டும், இந்துக்கள் விடுதலை பெறவேண்டும், விடுதலை பெறவேண்டும்! விடுதலை பெறவேண்டும்!! விடுதலை பெறவேண்டும்!!! விடுதலை பெற்றேயாக வேண்டும்!!!

(ஊ) மேலே குறிப்பிட்டுள்ள மூன்று வகையான விடுதலைகள் சொல் விளையாட்டாகவோ! சொல் அடுக்காகவோ! சொல் அழகாகவோ! கூறப்பட்டவை அல்ல, சொல்லப்பட்டவை அல்ல. அதாவது, இந்துவேத விடுதலை என்பதும், இந்துமத விடுதலை என்பதும், இந்துக்களின் விடுதலை என்பதும் முழுக்க முழுக்க தனிப்பட்ட அடிப்படைகளையும், முயற்சிகளையும் உடைய ஒன்றாகும். இப்பேருண்மைகளைப் புரிந்து கொண்டால்தான், மேற்படி மூன்று விடுதலைகளுக்குரிய விடுதலை முயற்சிகள், விடுதலைப் போராட்டங்கள், விடுதலைப் போர்கள்... முறையாகக் கருவாகி, உருவாகி வளர்ச்சி பெற்று முழுமையான வடிவத்தைப் பெறமுடியும். இல்லையெனில் பெறமுடியாது! பெறமுடியாது!! பெறமுடியாது!!! பெறவே முடியாது!!!!

(எ) இந்துவேதம் அடிமைப்பட்டிருக்கிறது. பெருமளவில் மறைக்கப் பட்டிருக்கிறது. பெருமளவில் மக்கள் தொடர்பை இழந்திருக்கிறது... எனவே, இந்த இந்துவேதத்தின் விடுதலை முயற்சிக்கு முன்னால், இந்த இந்துவேதம் முழுவதையும் வடிவப்படுத்தி வாழ்வு பெறச் செய்ய வேண்டும். அதற்குப் பிறகே, இந்த இந்துவேதம், அன்னிய வேதங்களால் சிறைப்படுத்தப் பட்டிருப்பதிலிருந்தும், அடிமைப்படுத்தப் பட்டிருப்பதிலிருந்தும், சிதைத்துச் சீரழிக்கப் படுவதிலிருந்தும்... விடுதலை பெற்றுத் தர வேண்டியிருக்கிறது. இதற்காக, மக்களிடையில் இந்துவேதம் பற்றிய வரலாறு, இந்துவேதம் பற்றிய செய்திகள், நூல்கள், செயல்நிலைகள், பயன்கள்.... முதலியவைகளெல்லாம் மிகத் தெளிவாக வரையறுத்து காலக் கணக்கீட்டடிப்படையில் விளக்கிக் காட்டப்பட வேண்டும். அவற்றின் அடிப்படையில்தான், இந்துவேத விடுதலைக்கான உணர்வும், எண்ணமும், சிந்தையும், செயலும் படிப்படியாக அடிப்படையோடு உருவாக வேண்டும்! உருவாக வேண்டும்!! உருவாக வேண்டும்!!! அப்படி உருவாகின்ற விடுதலை முயற்சிதான், முறையான வளர்ச்சியைப் பெற்று முழுமையான பயனை நல்க முடியும்.

(ஏ) இந்துமத விடுதலை என்று எடுத்துக் கொள்வோமேயானால், முதலில் நம் மக்களுக்கு இந்துமத வரலாறு, நூல்கள், இந்துமதம் தொடர்பான தலைவர்கள், அருளாளர்கள், தொண்டர்கள், பத்தர்கள்... முதலியவர் பற்றிய செய்திகள், இந்துமதத்தவர் உருவாக்கியுள்ள இலக்கியங்கள், இந்துமதம் தொடர்பான புராண இதிகாசங்கள், இந்துமதக் கொள்கைகள், குறிக்கோள்கள், நடைமுறைகள், பழக்க

வழக்கங்கள்... முதலியவைகள் பற்றியும்; இவற்றில் அன்னிய மதத்தவர்களால் ஏற்பட்டு விட்ட சிதைவுகள், சீரழிவுகள், திருத்தங்கள், குறைவுகள், இருட்டடிப்புக்கள், செயல் தேக்கங்கள், நலிவு மெலிவுகள்... முதலியவை அனைத்தும் கூடுமானவரை காலக் கணக்கீட்டடிப்படையில் விளக்கியுரைக்கப் பட்டேயாக வேண்டும். அப்பொழுதுதான், இந்துமதத்தின் விடுதலை, பொருளுடைய ஒன்றாக எல்லோருக்கும் புரிந்திடும். அதற்குப் பிறகுதான், இந்துமத விடுதலைக்குரிய முயற்சிகளும், அவற்றிற்குரிய பயிற்சிகளும் எவர் தடுத்தாலும், அல்லது எவர் எதிர்த்தாலும் எதற்கும் கட்டுப்படாமல் முளைத்து, கிளைத்துச் செழித்து வளர்ந்து உரிய பயனை நல்கிடும்! நல்கிடும்!! நல்கிடும்!!!

(ஐ) இந்துக்களின் விடுதலை என்பது மிகமிக நுட்பமாக, திட்டவட்டமாக ஒவ்வொரு அல்லது ஒவ்வோர் இந்துவின் நெஞ்சத்துக்கும், சிந்தைக்கும் தெரிவிக்கப் பட்டாக வேண்டிய ஒன்று; புரியவைக்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஏனென்றால், இன்றுள்ள பெரும்பாலான இந்துக்கள், 'தாங்கள் ஓர் இந்து', 'தங்களுடைய வேதம் இந்துவேதம்', 'தங்களுடைய மதம் இந்துமதம்', 'தங்களுக்கென்று தனிப்பட்ட கோயில்கள் உண்டு', 'தங்களுக்கென்று தனிப்பட்ட மதத் தலைவர்கள், குருமார்கள், குருக்கள்கள், பூசாறிகள், குருதேவர்கள், ஆச்சாரியார்கள், சாத்திரியார்கள், தோத்திரியார்கள்... முதலியோர்கள் உண்டு; தங்களுக்கென்று திருநாட்கள், திருவிழாக்கள், விரதங்கள், சடங்குகள், பழக்க வழக்கங்கள்.... முதலியவை உண்டு. தங்களுக்கென்று தனிப்பட்ட உணவுப் பழக்கங்கள் உண்டு, தங்களுக்கென்று தனிப்பட்ட மதச் சின்னங்கள், மத அடையாளங்கள் உண்டு. தங்களுக்கென்று தனிப்பட்ட கடமைகள் உண்டு....' என்ற பேருண்மைகளைத் தெரியாதவர்களாகவே! தெரியாதவர்களாகவே!! தெரியாதவர்களாகவே!!! இருக்கிறார்கள்! இருக்கிறார்கள்!! இருக்கிறார்கள்!!! மேலும், இந்து மதம் 43,73,094 ஆண்டுகள் என்று இன்றைய 1993 ஆண்டுடன் மிகத் தெளிவாக குறிக்கப்படக் கூடிய ஓர் ஒப்புயர்வற்ற மிகப்பெரிய நீண்ட பல நூறாயிரக் கணக்கான ஆண்டு கால வாழ்வியல் வளர்ச்சி வரலாற்றைப் பெற்றிருக்கிறது. இந்துமதம் என்பதால்! என்பதால்!! என்பதால்!!! "இந்து மதத்திற்கென்று தனிப்பட்ட ஒரே ஒரு தலைமை", "இந்துமதத்திற்கென்று தனிப்பட்ட ஒரே ஒரு நிறுவன நிர்வாகம்", "இந்து மதத்திற்கென்று தனித்து வரையறை செய்யப்பட்ட குறிப்பிட்ட ஒரு சில சட்டதிட்டக் கட்டுப்பாடுகள், விதிமுறைகள், நெறிமுறைகள் என்று எதுவும் அமையவில்லை இன்றைக்கு, எதுவும் அமையவில்லை இன்றைக்கு, எதுவும் அமையவில்லை இன்றைக்கு.... என்பதை இன்றுள்ள இந்துக்கள் உணராததால்தான் தாங்கள் அன்னிய மதத்தவர்களிடம் அடிமைப்பட்டுக் கிடப்பதை உணர முடியாதவர்களாக!? எண்ணிப் பார்க்க முடியாதவர்களாக!? உணர முடியாதவர்களாக!? எண்ணிப் பார்க்க முடியாதவர்களாக!? உணர முடியாதவர்களாக!? எண்ணிப் பார்க்க முடியாதவர்களாக!? வாழுகிறார்கள், வாழுகிறார்கள், வாழுகிறார்கள். வாழ்ந்து கொண்டே யிருக்கிறார்கள்.

இன்னும் சொல்லப் போனால் இந்த இந்துக்களிடையே பலர் இந்துமதம் என்ற ஒன்று இருக்கிறதா? இந்துமதம் என்ற ஒன்று இல்லாவிட்டால் என்ன? இந்துமதம் என்ற ஒன்றில்தான் வாழ வேண்டும் என்பது என்ன அவசியம்? இப்படியாக ஒவ்வோர் இந்துவும் தான் வாழுகின்ற வாழ்க்கை தன்னுடைய முன்னோர்கள் வாழ்ந்த இந்துமத வாழ்க்கைதான் என்பதைத் தெரிந்து கொள்ள முடியாமல், புரிந்து கொள்ள முடியாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இதுதான் உண்மை, உண்மை, உண்மை. இப்படிப்பட்ட இவர்களுக்கு அன்னிய மதங்களின் பிடியிலிருந்தும், அன்னிய மதங்களின் சிறைச் சாலைகளிலிருந்தும், அன்னிய மதங்களின் கட்டுக்களிலிருந்தும், விடுதலை பெற்றுத் தருவது என்பது எளிய ஒரு செயலல்ல! எளிய ஒரு செயலல்ல! எளிய ஒரு செயலல்ல! எனவே கணிசமான அளவு

இந்துக்களாவது தாங்கள் இந்துக்களாகப் பிறப்பெடுத்ததால் இந்துக்களாகவே வாழ்ந்து செல்வதுதான் இந்தப் பிறவியின் பயன் என்ற பேருண்மையை உணர்ந்து திருந்துவதற்குரிய சந்தர்ப்ப சூழ்நிலைகளையும், வசதி வாய்ப்புக்களையும், அறிவியலான கருத்துப் புரட்சிகளையும் உருவாக்க வேண்டும், உருவாக்க வேண்டும், உருவாக்க வேண்டும், உருவாக்கியேயாக வேண்டும். அதாவது, இந்துக்களின் விடுதலைப் போராட்டமும், போரும், இந்துவேத இந்துமத விடுதலைப் போராட்டங்களிலிருந்து குறிப்பிட்ட அளவாவது, வேறுபட்டுத் தனித்து விளங்க வேண்டும் என்பதுதான் இன்றைய தேவை! தேவை!! தேவை!!!

*[இக் கட்டுரையின் முடிவுப் பகுதி அடுத்த இதழில்]*

---

## குருதேவரின் அறிவுரை

உயிர் அழியாதது, உறவுகள் பிறப்புக்கள் தோறும் மாறலாம், மாறாதுமிருக்கலாம்.

பிறப்பிறப்பற்ற நிலைகளை அடைய முயல்வதும், முயலாததும் இப்பிறப்பின் ஆணவம், கன்மம், மாயை, ஆசை, கல்வி, முயற்சி முதலியவைகளால் அமைவதே. அதனால்

- ‘திருவும் குருவும் ஒன்று’,
- ‘குருவே அனைத்துக்கும் கரு’,
- ‘குருவில்லா வித்தை பாழ்’,
- ‘குருவழிக் காணலே உண்மைக் காட்சி’,
- ‘குருவழிப் பெற்றவைகளையே துய்க்க முடியும்’,
- ‘குருவே மெய்’

என்பனவற்றை உணருங்கள்.

## அருள் பெறும் கலசப்பூசை

குருதி வண்ண சிவப்பில் (Blood Red Color) 4 முழ வேட்டி, 6 முழ இடுப்புத் துண்டு, 12 முழத் தலைப்பாகை வாங்கி அதனை குருதேவரால் தயாரிக்கப்பட்ட அடியான், அடியாள், அடியார்களில் யாராவது ஒருவரிடம் கொடுத்து வாழ்த்துப் பெற்று முறைப்படி அணிந்து கொண்டு அருள் பெறும் கலசப் பூசையினைச் செய்ய வேண்டும். அதாவது அன்றாடம் நள்ளிரவில் 11 to 1:30 = இரண்டரை மணிநேரம் ஒரு பெரிய நிலைக்கண்ணாடி வைத்து அதன் முன்னால் குத்துவிளக்கு ஒரு திரி ஏற்றி அதற்கு முன்னால் மந்திரித்த கலச கும்பம் வைத்து உலக அருளாளர்களிடம் இருந்து அருள் சத்தி வேண்டிப் பூசை செய்ய வேண்டும். பூசை நேரங்களில் இடது தோளில் 6 அடி நீளமுள்ள கொம்பில் (சிவலிங்கம் பொறித்த) ஞானக்கொடியைக் கட்டி சாய்த்து வைத்துக் கொள்ள வேண்டும். வலதுகையில் சில மயில் தோகைகளை வைத்துக் கொள்ள வேண்டும். மயில் தோகையை கலசத்தின் மீதும், யாக குண்டத்தின் மீதும் வைத்தால் அருட்சத்தி கிடைக்கும். இதே மாதிரி மயில் தோகையை அருள் வேண்டி வருபவர் மீது வைத்தால் அவர்களுக்கு அருட்சத்தி கிடைக்கும். இம் முறையினைத்தான் உலக அருளாளர்கள் இன்றைய நிலையில் உலகஅளவில் செயல்படுமாறு அறிவித்திருக்கிறார்கள்.

